டிரஸ்ட் ஆரம்பித்திட...
புதிதாக டிரஸ்ட், பவுண்டேஷன், கட்சி, ஆசிரமம், சங்கம், மன்றம், கழகம் பதிவு செய்திட தொடர்பு கொள்ளவும்.
பகவான் பவுண்டேஷன்
96004 02096

நல்லவே எண்ணல் வேண்டும்.., எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" புலனாய்வு நாளிதழ்
www.SAKKRAVIYUGAM.com

TAMIL PRESS CLUB
தமிழ் பிரஸ் கிளப்
Reg.No: 12/2013
தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் சிறப்பாக செயல்பட்டு வரும் பொது நல அமைப்பிற்கு 2026 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பம்...
ஆர்வமுள்ளவர்கள் அமைப்பாளராக இணைந்திட
88705 00000
99 44 616 559

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 165 | 9.12.2025 | TUESDAY | KARTHIGAI : 22 | PRICE : RS.5/-
மலர் : 01 | இதழ் : 165 | 9.12.2025 | செவ்வாய்கிழமை | கார்த்திகை : 22 | விலை : ரூ.5/–

3 "நீங்கள் அங்காளி, பங்காளி என்றால் நாங்கள் மாமன், மச்சான்" முதல்வருக்கு நயினார் விளக்கம்

4 "லஞ்சத்தை இயல்பாக்கிய திமுக" ரூ.1020 கோடி 'கட்சி நிதி' விவகாரத்தில் தவெக விமர்சனம்

2 "நகராட்சி நிர்வாகத்துறையில் திமுகவின் ரூ.1,020 கோடி டெண்டர் ஊழல் குறித்து விசாரணை தேவை" அன்புமணி

# வரைவு வாக்காளர் பட்டியலுக்குப் பிறகு திமுகவினர் இன்னும் தீவிரமாக பணியாற்ற வேண்டும்: மு.க. ஸ்டாலின்

சென்னை, டிச.9-
வரைவு வாக்காளர் பட்டியல் வெளியான பிறகு திமுகதொண்டர்கள் இன்னும் தீவிரமாக பணியாற்ற வேண்டும் என மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

திமுக தலைவரும் முதல்வருமான மு.க. ஸ்டாலின் தலைமையில் திமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி நடைபெற்று வருகிறது.

'என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி' என்ற தலைப்பில் நடைபெறும் இந்த கூட்டத்தில் 2026 சட்டப்பேரவைத் தேர்தல் தொடர்பாக ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

டிச. 11 ஆம் தேதி எஸ்ஐஆர் பணிகள் முடிவடைந்ததாலும் அதன்பின்னர் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியான பிறகு திமுக தொண்டர்கள் இன்னும் தீவிரமாக பணியாற்ற வேண்டும். தகுதியானவர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுவிடக் கூடாது என்பதை உன்னிப்பாக கவனிக்க வேண்டும். பெயர் விடுபட்டிருந்தால் அவர்களின் பெயர்களைச் சேர்க்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று திமுக தொண்டர்களுக்கு முதல்வர் வலியுறுத்தியுள்ளார். சட்டப்பேரவைத் தேர்தல் பணிகள், ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள வெற்றி வாய்ப்பு குறித்தும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.



## தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அனைத்து சங்கங்களின் கூட்டமைப்பினர் 13 அம்ச கோரிக்கை வலியுறுத்தி போராட்டம்

சென்னை, டிச.9-
12 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அனைத்து துறை சங்கங்கள் சார்பில் கவன ஈர்ப்பு போரட்டம் மற்றும் பேரணி சென்னையில் வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது.



கோரிக்கைகள்:

1. கிராம ஊராட்சியில் பணிபுரியும் ஊராட்சி செயலாளர்களுக்கு தேர்வுநிலை, சிறப்பு நிலை ஊதியம் வழங்க வேண்டும் ஊதியம் அரசு கருவூலம் மூலம் வழங்கவேண்டும்.
2. கிராம ஊராட்சியில் பணிபுரியும் மேல்நிலை நீர்தேக்க தொட்டி இயக்குனர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் வழங்கவேண்டும்.
3. கிராம ஊராட்சியில் பணியாற்றும் தூய்மை காவலர்களுக்கு மாதச்சம்பளம் ரூ10000/ வழங்க வேண்டும்.
4. கிராம ஊராட்சியில் பணியாற்றும் கூஷி றி ஸி சி, றி லி தி கணக்காளர்களுக்கு தனி நிதி ஒதுக்கீடு செய்து மாததச்சம்பபளம் ரூ10000/ வழங்கவேண்டும்.
5. கிராம ஊராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்க வேண்டும். காலிப்பணியிடத்தை நிரப்ப வேண்டும்.
6. முழு சுகாதார திட்டம் மாவட்ட, வட்டார ஒருங்கிணைப் பாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கி பணி நிரந்தரம் செய்ய வேண்டும்.
7. கிராம ஊராட்சியில் பணியாற்றி வரும் சுகாதார ஊக்குனர்களுக்கு மாத ஊதியம் ரூ.2000/ லிருந்து ரூ.10000/ ரூபாய் ஆக உயர்த்தி வழங்க வேண்டும்.
8. ஒய்வு பெற்ற ஊராட்சி செயலர்களுக்கும் மாதம் ரூ.10000/ ஓய்வூதியம் வழங்க வேண்டும்.
9. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்ட கணிணி உதவியாளர்கள் மற்றும் மாவட்ட தலைமை அலுவலகம், ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் பணிபுரியும் அனைத்து கணிணி இயக்குனர்களுக்கும் ஊதிய உயர்வு வழங்கி பணி நிரந்தரம் செய்யவேண்டும்.
10. கிராம ஊராட்சியில் பணிபுரியும் கணிணி இயக்குனர்களுக்கு மாத ஊதியம் ரூ.10000/ வழங்கவேண்டும்.
11. ஒன்றிய அரசின் திட்டங்களை நடைமுறைப்படுத்த அனைத்து ஒன்றியங்களிலும் புதியதாக ஒரு வட்டார வளர்ச்சி அலுவலர் பணியிடம் உருவாக்க வேண்டும்.
12. தமிழகத்தில் உள்ள பெரிய ஊராட்சி ஒன்றியங்களை பிரித்து புதிய ஊராட்சி ஒன்றியங்கள் உருவாக்க வேண்டும் மற்றும் பெரிய கிராம

ஊராட்சிகளை பிரித்து புதிய ஊராட்சிகளை உருவாக்கவேண்டும்.

மாநிலம், மாவட்டம், ஒன்றியம், கூட்டமைப்பு நிர்வாகிகள் மற்றும் அனைத்து நிலை

பணியாளர்கள் திரளாக பங்கேற்க உள்ளனர்.

பேரணியை மாநில ஒருங்கிணைப் பாளர்களான சார்லஸ், செல்லப்பாண்டி, செந்தில்குமார், ஆகியோர் ஏற்பாடு செய்துள்ளனர்.

## அலங்காநல்லூரில் காங்கிரஸ் கட்சியின் வடக்கு மாவட்ட புதிய தலைவர் பதவிக்கு வேட்பு மனு பெறுதல் நிகழ்ச்சி

அலங்காநல்லூர் டிச.09
அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் சார்பில் புதிய மாவட்ட தலைவர்களை நியமிக்க விருப்பமுள்ளவர்களிடம் வேட்பு மனு தாக்கல் செய்யும் நிகழ்ச்சி அலங்காநல்லூரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் வடக்கு மாவட்ட தலைவர் ஆலாத்தூர் ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் வட்டார தலைவர் சுப்பாராயலு, காந்தி முன்னிலை வகித்தனர்.

புதிய மாவட்ட தலைவர் பதவிகளுக்கான மனு பெறுதல் நிகழ்சியில் மத்திய பிரதேச முன்னால் விவசாயத்துறை அமைச்சர் அருண் யாதவ் கலந்து கொண்டு மனுக்களை பெற்றுக் கொண்டார்.



முன்னதாக அருண் யாதவை பட்டாசு மற்றும் மேளதாளங்கள் முழங்க சிறப்பு வரவேற்பு வழங்கப்பட்டது அதற்கான ஏற்பாடுகளை மாநில பொதுக்குழு உறுப்பினர் சோழவந்தான் மூர்த்தி ஏற்பாடு செய்திருந்தார்.

தெலுங்கான தேர்தல் பொறுப்பாளர் முன்னால் எம்.பி விஸ்வநாதன், மாநகர் மாவட்ட தலைவர் கார்த்திகேயன், மனித உரிமை கழக முன்னால் மாவட்ட தலைவர் மகாத்மா சீனிவாசன், மாநில பொறுப்பாளர் இதயத்துல்லா, முன்னால் மனித உரிமை மாவட்ட தலைவர் ஜெயமணி, மகிளா காங்கிரஸ் மாவட்ட தலைவர் செல்லப்பா சரவணன், தொகுதி மகளிரணி ரேகா மூர்த்தி, மற்றும் நளினி செண்பகம் மாநில துணை தலைவர் சங்கரபாண்டி, மதுரை வடக்கு மாவட்ட எஸ்.சி.எஸ்.டி. தலைவர் ராஜா, சல்லக் குளம் மணி, நகர செயலாளர் வைரமுத்து, முன்னாள் வட்டார தலைவர் மலைக் கனி மற்றும் சந்திரசேகர், சரந்தாங்கி முத்து உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



## இடையன்குடியில் த.வெ.க. மாவட்ட செயலாளர் தலைமையில் தமிழக வெற்றிக்கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்

திசையன்விளை.டிச.9
திசையன்விளை அருகே உள்ள இடையன் குடி ராஜா மகாலில் தமிழக வெற்றி கழக ராதாபுரம் ஒன்றியம் மற்றும் திசையன்விளை பேரூர் கழக பூத் பொறுப்பாளர் கள் ஆலோசனை கூட்டம் நெல்லை தெற்கு மாவட்ட செயலாளர் ராஜகோபால் தலைமையில் நடந்தது. இதில் பூத் கமிட்டி பொறுப்பாளர் களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் ராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் அந்தோணி , கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜ் குமார், தெற்கு ஒன்றிய செயலாளர் சிவா, வடக்கு ஒன்றிய செயலாளர் முருகன், மத்திய ஒன்றிய செயலாளர் குமரேசன் திசையன்விளை நகர செயலாளர் கில்லி ராஜா மற்றும் மாவட்ட ஒன்றிய சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மனிஷ் நாரணவரே தலைமையில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

திருப்பூர், டிச.9-
மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், திருப்பூர் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

ஒவ்வொரு வாரமும் திங்கள் கிழமைகளில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு அவை அனைத்தும் தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உரிய தீர்வு காணப்பட்டு வருகிறது.



அந்த வகையில், இன்றைய தினம் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து வீட்டுமனை பட்டா மற்றும் முதியோர் உதவித்தொகை, புதிய குடும்ப அட்டை வேண்டியும், சாலை வசதி, குடிநீர் வசதி வேண்டியும் என பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக 328 மனுக்களை பெற்றுக் கொண்டதுடன் மனுதாரர்கள் முன்னிலை யிலேயே விசாரனை செய்து அதன் மீது உரிய நடவடிக்கை யினை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

தொடர்ந்து, மாற்றுத்திறனாளி நலத்துறையின் சார்பில் தலா ரூ.2500/ மதிப்பீட்டில் 03 மாற்றுத்திறனாளிகளுக்கு பிரெய்லி கடிகாரங்களையும், 01 மாற்றுத்திறனாளிக்கு ரூ.600/ மதிப்பீட்டில் ஊன்றுகோல், 01 மாற்றுத்திறனாளிக்கு ரூ.11500/ மதிப்பீட்டில் மூன்று சக்கர வண்டி என மொத்தம் ரூ.19,600/ மதிப்பீட்டில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே இ.ஆ.ப., அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (பொது) மகாராஜ், (நிலம்) திருமதி மலர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் கல்பனா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் .சரவணக்குமார் மற்றும் அனைத்து அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## மத்திய பிரதேசம் இந்தூரில் நடந்த தேசிய தடகள போட்டி : திசையன்விளை பள்ளி மாணவி சாதனை

திசையன்விளை. டிச.9
69ஆவது இந்திய பள்ளிக் குழுமங்களுக்கு இடையிலான தேசிய எஸ் ஜிஎப்ஐ தடகள விளையாட்டுப் போட்டி, மத்திய பிரதேச மாநிலம் இந்தூரில் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு சார்பில் 30க்கும் மேற்பட்ட வீரர் வீராங்கனைகள் பங்கேற்றனர்.




இந்தப் போட்டியில் 14 வயது பிரிவில், நெல்லை மாவட்டம் திசையன்விளை அருகே உள்ள நாலந்துலா முத்துக்குமார் இசக்கியம்மாள் தம்பதியினரின் மகள் திசையன்விளை டேனியல் தாமஸ் பள்ளியைச் சேர்ந்த மு.இ. ராஜேஸ்வரி (வயது 14) நீளம் தாண்டுதல் மற்றும் உயரம் தாண்டுதல் பிரிவுகளில் கலந்துகொண்டு சிறப்பான சாதனைகளைப் படைத்துள்ளார்.

ராஜேஸ்வரி 5.18 மீட்டர் நீளம் தாண்டி வெண்கலப் பதக்கம் வென்று மாநிலத்திற்கும், தனது பள்ளிக்குமான பெருமை சேர்த்துள்ளார்.

உயரம் தாண்டுதல் பிரிவில் 1.46 மீட்டர் உயரம் தாண்டிய அவர், மூன்றாவது இடத்தில் நான்குபோட்டியாளர்களுடன் இணையாக இருந்தாலும், விதிமுறைகளின்படி 6வதுஇடம்வழங்கப்பட்டது


மு.இ. ராஜேஸ்வரி தற்போது திசையன்விளை டேனியல் தாமஸ் மெட்ரிக்குலேஷன் பள்ளியில் 8ஆம் வகுப்பு படித்து வருகிறார். இது தேசிய மட்டத்தில் இப்பள்ளிக்கு கிடைக்கும் இரண்டாவது பதக்கம் என்பதும்சிறப்புக்குரியது.

மாணவியின் மு.இ. ராஜேஸ்வரியின் இந்த சாதனையை வாழ்த்தி பள்ளித் தாளாளர் ஒரு தங்கச் செயினை பரிசாக வழங்கினார். பள்ளித் தாளாளர், தலைமை ஆசிரியர், உடற்கல்வி ஆசிரியர்கள், மற்றும் நாலந்துலா ஊர் பொதுமக்கள் அனைவரும் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

இந்த வெற்றிக்கான பின்னணியில் தன்னுடன் இருந்த பள்ளித் தாளாளர், உடற்கல்வி ஆசிரியர்கள் நெ. ஜெனிஸ்கர், அ. அனிற்றா ஜரின்,

மேலும் தனது பெற்றோர்கள் ஆகியோருக்கு மு.இ. ராஜேஸ்வரி தனது நன்றிகளைத் தெரிவித்தார்.

# 2047ல் இந்தியா வளர்ச்சியடைந்த நாடாக உருவாக வந்தே மாதரம் ஊக்குவிக்கும்; பிரதமர் மோடி



புதுடில்லி. டிச.9-

வரும் 2047ல் இந்தியா வளர்ச்சியடைந்த நாடாக உருவாக வந்தே மாதரம் ஊக்குவிக்கும் என்று லோக்சபாவில் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

நாட்டின் தேசியப் பாடலான வந்தே மாதரம் பாடலின் 150வது ஆண்டு நிறைவு குறித்து இன்று லோக்சபாவில் சிறப்பு விவாதம் தொடங்கியது. இதை பிரதமர் மோடி தொடங்கி வைத்து உரையாற்றினார்.

அவர் பேசியதாவது; வந்தே மாதரம் 150வது ஆண்டு விழா விவாதத்தில் பங்கேற்பது பெருமை. இது வரலாற்று சிறப்பு மிக்க தருணம். வந்தே மாதரம் விவகாரத்தில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்றெல்லாம். ஏதுமில்லை. வந்தே மாதரம் ஊக்குவித்த சுதந்திர போராட்டத்தினால் நாம் இன்று சுதந்திரமாக இங்கு அமர்ந்திருக்கிறோம். வந்தே மாதரம் என்பது வெறும் சுதந்திரப் போராட்டத்திற்கான முழக்கம் அல்ல. சுதந்திர தாய்க்கான பாடல். அனைத்து இந்தியர்களின் நம்பிக்கை.

வந்தே மாதரம் பல கட்டங்களை கடந்து வந்துள்ளது. வந்தே மாதரத்தை பிரிட்டன் மகாராணி வாழ்க என்று பாட வைக்க ஆங்கிலேயர்கள் விரும்பினார்கள். பலம் வாய்ந்த பிரிட்டனை எதிர்க்க 1875ம் ஆண்டு பங்கிம் சாட்டர்ஜி, வந்தே மாதரம் பாடலை கொடுத்தார். 2047ல் வளர்ச்சியடைந்த நாடாக இந்தியா உருவாக, வந்தே மாதரம் நம்மை ஊக்குவிக்கும். வந்தே மாதரம் இயற்றப்பட்ட போது, நாடு அடிமைச்சங்கிலியில் சிக்கி இருந்தது. நாடு அடிமைப்பட்டு இருந்தது நமது வரலாற்றில் கருப்பு அத்தியாயம்.

இந்த விவாதத்தின் மூலம், எதிர்கால தலைமுறையினர் வந்தே மாதரம் குறித்து அறிந்து கொள்ள முடியும். எதிர்பாராதவிதமாக, வந்தே மாதரத்தின் 100ம் ஆண்டில் அவசரநிலையை சந்தித்தோம், இவ்வாறு அவர் கூறினார்.

## அமைச்சர் நேருவுக்கு எதிராக வழக்குப்பதிய வேண்டும்: அண்ணாமலை



சென்னை, டிச.9-

அமைச்சர் நேருவுக்கு எதிராக அமலாக்கத்துறை சமர்ப்பித்திருக்கும் லஞ்சம், முறைகேடு புகார் குறித்து வழக்குப்பதிவு செய்ய போலீசாருக்கு முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட வேண்டும் என்று பாஜ முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கேஎன் நேரு, டெண்டர்களில் முறைகேடில் ஈடுபட்டு 1,020 கோடி சம்பாதித்ததாகக் கூறி, தமிழக டிஜிபிக்கு அமலாக்கத்துறை கடிதம் எழுதியுள்ளது. அவர் மீது வழக்குப்பதிவு நடவடிக்கை எடுக்குமாறு குறிப்பிட்டிருந்தது.

இந்த நிலையில், டெண்டர் முறைகேடு மற்றும் நகராட்சி நிர்வாகத்துறை பணியாளர் நியமனத்தில் லஞ்சம் பெற்ற புகார் குறித்து வழக்குப்பதிவு செய்ய போலீசாருக்கு முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட வேண்டும் என்று பாஜ முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.


அவரது அறிக்கை;

திமுக ஆட்சியில் ஊழல் நடப்பது என்பது பெரிய விஷயமல்ல. ஆனால், தற்போது மலைபோல ஆதாரங்களுடன் தவிர்க்க முடியாத நிலையில் இருக்கிறது. அமைச்சர் கேஎன் நேரு வேலைவாய்ப்பு நியமனத்திற்கு ரூ.888 கோடி லஞ்சம் வாங்கியதை தொடர்ந்து, தற்போது 1,020 கோடி ஊழல் வெளிச்சத்திற்கு வந்துள்ளது. இது தொடர்பாக 252 பக்க அறிக்கையை டிஜிபியிடம் அமலாக்கத்துறை சமர்ப்பித்துள்ளது.

உறவினர்கள் மூலம் ஒப்பந்ததாரர்களிடம் பணம் வாங்கி, மிகப்பெரிய அளவிலான கொள்ளை நடந்துள்ளது. அதுமட்டுமில்லாமல், வாட்ஸ்அப் உரையாடல்கள், ஹவாலா பணமோசடி குறித்த விபரங்களையும் அமலாக்கத்துறை கொடுத்துள்ளது.

கடந்த 4 ஆண்டுகளாக திமுக அரசில் சிறப்பாக செயல்பட்ட ஒரே துறை, கலெக்‌ஷன், கமிஷன் மற்றும் கரப்ஷன் துறை மட்டும் தான். உடனடியாக, டெண்டர் முறைகேடு மற்றும் பணியாளர் நியமனத்தில் லஞ்சம் பெற்ற புகார் குறித்து வழக்குப்பதிவு செய்ய போலீசாருக்கு முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட வேண்டும், இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# சிங்கப்பூரில் 2026 முதல் விமானப் பயணிகளுக்கு கடும் கட்டுப்பாடுகள் விதிப்பு



கோலாலம்பூர். டிச.9-

சிங்கப்பூரில் வரும் 2026ம் ஆண்டு ஜனவரி இறுதியில் இருந்து விமானப் பயணிகளுக்கான கட்டுப்பாடுகள் மிகவும் கடுமையாக்கப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பிற நாடுகளில் இருந்து தங்கள் நாட்டுக்கு வரும் விமான நிறுவனங்களுக்கு சிங்கப்பூர் குடிவரவு மற்றும் சோதனைச்சாவடிகள் ஆணையம் (மிசிகி) நோட்டீஸ் அனுப்பியுள்ளது. அதில், சிங்கப்பூருக்கு வரும் பயணிகளின் விபரங்கள் மற்றும் ஆவணங்களை முன்கூட்டியே அனுப்பி வைக்க வேண்டும். அதனை ஆய்வு செய்த பிறகு, தகுதியான ஆவணங்கள் இருந்தால் மட்டுமே அவர்கள் சிங்கப்பூர் வர அனுமதிக்கப்படுவார்கள். இல்லையெனில், அவர்கள் புறப்படும் விமான நிலையத்திலே தடுத்து நிறுத்தப்படுவார்கள்.

குறிப்பாக, உரிய விசா அல்லது 6 மாத காலத்திற்கு செல்லுபடியாகும் பயண ஆவணங்கள் இல்லாத பயணிகளுக்கு அனுமதி கிடையாது.

சிங்கப்பூருக்குச் செல்ல விரும்பும் பயணிகள், விமான டிக்கெட் எடுப்பதற்கு முன், ஐசிஏ தளத்தின் வழியாக நுழைவு அனுமதிக்கு விண்ணப்பிக்க வேண்டும். உரிய ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும். ஐசிஏ நேரடியாக அனுமதி அளிக்கும் வரை பயணத்தை திட்டமிடக் கூடாது.

இந்த விதிகளை கடைபிடிக்காத விமான நிறுவனங்களுக்கு ரூ.7 லட்சம் வரையில் அபராதம் விதிக்கப்படும். மேலும், தகுதியான ஆவணங்கள் இல்லாத பயணியை அனுமதித்த விமான நிறுவன ஊழியர்களுக்கு 6 மாதம் வரை சிறை தண்டனை விதிக்கப்படும், இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டுப்பாடுகள் வரும் 2026ம் ஆண்டு ஜனவரி 30ம் தேதி முதல் அமலுக்கு வர இருக்கிறது.

உலகளவில் மிகவும் பாதுகாப்பான நாடுகளில் சிங்கப்பூர் முன்னிலை வகிக்கிறது. இதனை தொடர்ந்து உறுதி செய்யும் விதமாக, விமான நிலையங்களில் கடுமையான கட்டுப்பாடுகளை அந்நாடு விதித்து வருவது குறிப்பிடத்தக்கது.

## சட்டவிரோதமாக ஜம்மு காஷ்மீருக்குள் நுழைந்த சீனர் கைது

ஸ்ரீநகர். டிச.9-

சட்டவிரோதமாக ஜம்மு காஷ்மீருக்குள் நுழைந்த சீனாவைச் சேர்ந்த நபர் கைது செய்யப்பட்டார்.

இது குறித்து அதிகாரிகள் கூறியதாவது; சீனாவைச் சேர்ந்த ஹூ காங்டை,29, என்பவர் கடந்த நவம்பர் 19ம் தேதி சுற்றுலா விசாவில் டில்லி வந்தார். வாரணாசி, ஆக்ரா, புதுடில்லி, ஜெய்ப்பூர், சார்நாத், கயா மற்றும் குஷி நகர் போன்ற புத்த மத தலங்களை பார்வையிட மட்டுமே அவருக்கு அனுமதியளிக்கப்பட்டது. இவர் நவம்பர் 20ம் தேதி லேவுக்கு விமானம் மூலம் சென்றுள்ளார். அங்கு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான வருகைப் பதிவு குறிப்பேட்டில் பதிவு செய்யாமல், வெளியேறியுள்ளார்.

பின்னர், ஜான்ஸ்கர் பகுதியில் 3 நாட்கள் தங்கியிருந்து இமாலய மலையை ஒட்டியுள்ள இடங்கள் என பல பகுதிகளை சுற்றிப் பார்த்துள்ளார். அதன்பிறகு டிசம்பர் 1ம் தேதி ஸ்ரீநகர் வந்துள்ளார். மேலும், உள்ளூரில் சட்டவிரோதமாக சிம்கார்டையும் வாங்கி பயன்படுத்தியுள்ளார். அவரது செல்போனை ஆய்வு செய்ததில், சிஆர்பிஎப் ராணுவ தளங்கள் மற்றும் அரசியலமைப்புச் சட்டம் 370 ரத்து செய்யப்பட்டது குறித்து கூகுளில் தேடியுள்ளார். மேலும், தெற்கு காஷ்மீரில் உள்ள ராணுவ தளங்களுக்கு அருகில் உள்ள இடங்களுக்கு சென்று வந்துள்ளார்.

ஹூ காங்டை பாஸ்டன் பல்கலையில் பட்டம் பெற்றுள்ளார். முன்பு அமெரிக்கா, நியூசிலாந்து, பிரேசில், ஹாங் காங் உள்ளிட்ட நாடுகளுக்கும் சென்று வந்துள்ளார். விசா விதிமுறைகளை மீறியதால், அவரை நாடு கடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது, என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "நகராட்சி நிர்வாகத்துறையில் திமுகவின் ரூ.1,020 கோடி டெண்டர் ஊழல் குறித்து விசாரணை தேவை" அன்புமணி



சென்னை. டிச.9-

நகராட்சி நிர்வாகத்துறையில் நடந்திருக்கும் ரூ.1,020 கோடி டெண்டர் ஊழலை காவல்துறை உடனடியாக வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்த வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாட்டில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் ஒப்பந்தங்களை வழங்கியதில் ரூ.1,020 கோடி அளவுக்கு கையூட்டு மற்றும் கட்சி நிதி வசூலிக்கப்பட்டிருப்பதற்கான ஆதாரங்களை தமிழக காவல்துறை தலைமை இயக்குநருக்கு அனுப்பியுள்ள அமலாக்கத் துறை, அதனடிப்படையில் வழக்குப் பதிவு செய்யும்படி கேட்டுக் கொண்டிருக்கிறது.

ஏற்கெனவே இதே துறையில் வேலைவாய்ப்பு வழங்கியதில் ரூ.888 கோடிக்கு ஊழல் நடந்ததற்கான ஆதாரங்களை அமலாக்கத் துறை வழங்கியிருக்கும் நிலையில், இப்போது மேலும் ரூ.1,020 கோடி கையூட்டு வாங்கப்பட்டிருப்பதாக கூறப்படுவது அதிர்ச்சியளிக்கிறது.

ரூ.888 கோடி வேலைவாய்ப்பு ஊழலுக்கான ஆதாரங்கள் அமலாக்கத்துறையிடம் எவ்வாறு சிக்கினவோ, அதேபோல் தான் இந்த ஊழலுக்கான ஆதாரங்களும் சிக்கியுள்ளன. தமிழ்நாட்டின் பல பகுதிகளில் கடந்த ஏப்ரல் மாதம் 7 ஆம் தேதி முதல் 3 நாள்களுக்கு அமலாக்கத் துறை சோதனை நடத்தியது. அந்த சோதனையில் இந்த ஊழல் குறித்த ஆவணங்கள் கிடைத்ததாக தமிழக காவல்துறைக்கு எழுதிய கடிதத்தில் அமலாக்கத் துறை தெரிவித்திருக்கிறது.

டெண்டர் ஊழலுக்கான தொகைகள் எவ்வாறு பெறப்பட்டன? அவை ஹவாலா முறையில் எவ்வாறு சட்டவிரோதமாக பரிமாற்றம் செய்யப்பட்டன? என்பது குறித்த ஆதாரங்கள், புகைப்பட சான்றுகள், வாட்ஸ்அப் தகவல் பரிமாற்றங்கள் அடங்கிய 252 பக்க ஆவணத்தையும் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் முருகானந்தம், காவல்துறை பொறுப்பு டிஜிபி வெங்கட்ராமன் ஆகியோருக்கு அனுப்பிய கடிதத்தில் அமலாக்கத் துறை மிகத் தெளிவாக விளக்கியிருக்கிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்படுவதற்கு முன்பாகவே அந்த ஒப்பந்தம் யாருக்கு வழங்கப்பட வேண்டும் என்பது ஆட்சியாளர்களால் முடிவு செய்யப்பட்டதாகவும், யார் கையூட்டு கொடுத்தார்களோ, அவர்கள் மட்டுமே ஒப்பந்தம் பெறும் வகையில் ஒப்பந்தப்புள்ளி விதிகள் திரிக்கப்பட்டதாகவும் தங்களுக்கு கிடைத்த ஆதாரங்கள் தெரிவிக்கப்பதாக அமலாக்கத்துறை எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சமூக கழிப்பறைகள், மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் துப்புரவுப் பணிகளை தனியார் நிறுவனங்களுக்கு வழங்குதல், நபார்டு வங்கி நிதியுதவியில் நடைபெறும் திட்டங்கள் ஆகியவற்றுக்கான ஒப்பந்தங்கள் வாயிலாக மட்டும் இந்த ஊழல் நடைபெற்றிருப்பதாகவும் அமலாக்கத் துறை தெரிவித்துள்ளது.

ஒப்பந்தம் பெறுவதற்காக தேர்வு செய்யப்பட்ட நிறுவனத்திடமிருந்து கையூட்டாகவும், திமுக கட்சி நிதியாகவும் இந்த ரூ.1,020 கோடி வசூலிக்கப்பட்டிருப்பதாகவும் அமலாக்கத் துறை கூறியிருக்கிறது. திமுக எந்த அளவுக்கு ஊழலில் திளைக்கும் கட்சி என்பதற்கு இதை விட வலிமையான ஆதாரம் வேறு எதுவும் இருக்க முடியாது.

அரசுத்துறைகளின் ஒப்பந்தங்களை வழங்கும்போது, விதிகள் தான் பின்பற்றப்பட வேண்டும். ஆனால், திமுக ஆட்சியில் ஊழல் செய்ய வேண்டும் என்ற எழுதப்படாத விதி தான் பின்பற்றப்பட்டிருக்கிறது. விதிகள் என்ன சொன்னாலும் கவலை இல்லை, யார் அதிக கையூட்டு தருகிறார்களோ, அவர்களுக்கே ஒப்பந்தம் வழங்கப்பட வேண்டும் என்பதை கொள்கையாக திமுக அரசு கடைபிடித்து வருகிறது.

ஊழல் செய்வதற்கு ஏற்ற வகையில் திமுகவினர் விதிகளை வகுத்திருக்கிறார்கள் எனும் போது, திமுகவினர் ஆட்சி செய்வதே ஊழல் செய்வதற்காகவும், அதற்கு வசதியாக விதிகளை வகுப்பதற்காகவும் தான் என்பது அம்பலமாகிறது. அண்மையில் சென்னையில் ராயபுரம், திரு.வி.க. நகர் ஆகிய மண்டலங்களில் குப்பை அள்ளும் ஒப்பந்தம் தனியாருக்கு வழங்கப்பட்டதை எதிர்த்து தூய்மைப் பணியாளர்கள் நூறு நாட்களைக் கடந்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.

குப்பை அள்ளும் ஒப்பந்தம் தனியாருக்கு வழங்கப்பட்டதை ரத்து செய்ய வேண்டும் என்ற தூய்மைப் பணியாளர்களின் கோரிக்கையை ஏற்க மறுத்துவிட்ட திமுக அரசு, அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டு அவர்களின் போராட்டத்தை சிதைத்தது.

அப்போதே ரூ.2300 கோடி குப்பை அள்ளும் ஒப்பந்தந்தை பாதுகாக்கவும், அதற்காக தங்களுக்கு கிடைத்த வெகுமதிக்கு நன்றிக் கடன் செலுத்தவும் தான் தூய்மைப் பணியாளர்கள் மீது திமுக அரசு அடக்குமுறையை கட்டவிழ்ப்பதாக குற்றஞ்சாட்டியிருந்தேன்.

இத்தகைய குப்பை அள்ளும் ஒப்பந்தங்களை தனியாருக்கு வழங்குவதற்காகவும் கையூட்டு பெறப்பட்டதாக அமலாக்கத் துறை அனுப்பிய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. குப்பை அள்ளும் கார்ப்பரேட் நிறுவனங்களிடம் கையூட்டு பெற்றுக் கொண்டு, கூலிப்படையை போன்று தூய்மைப் பணியாளர்களை ஒடுக்குகிறது என்றால், மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு யாருக்கான அரசு என்பதை மக்கள் புரிந்து கொள்ளலாம்.

ரூ.1,020 கோடி டெண்டர் ஊழல் என்பது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் சிறிய அளவில் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்காக பெறப்பட்ட கையூட்டின் சிறு பகுதி தான். உண்மையில் இந்தத் துறையில் நடைபெற்ற ஊழலின் மதிப்பு மட்டும் இன்னும் பல மடங்கு இருக்கும்.


திமுக அரசின் அனைத்துத் துறைகளிலும் நடைபெற்ற மொத்த ஊழல்களின் மதிப்பைக் கணக்கிட்டால், அது தமிழ்நாட்டின் ஒட்டுமொத்தக் கடனையும் அடைப்பதற்கு தேவையான நிதியை விட கூடுதலாக இருக்கும் என்பதே உண்மை.

திமுக ஆட்சியில் கடந்த காலங்களில் நடந்த ரூ.4,730 கோடி மணல் கொள்ளை ஊழல், ரூ.888 கோடி வேலைவாய்ப்பு ஊழல் ஆகியவை குறித்த ஆதாரங்களை அமலாக்கத்துறை அனுப்பியும், அதன் மீது வழக்கு தொடர திமுக ஆட்சியாளர்கள் அஞ்சி வருகின்றனர்.

நகராட்சி நிர்வாகத்துறையில் நடந்திருக்கும் ரூ.1,020 கோடி டெண்டர் ஊழலையும் அதேபோல் கிடப்பில் போட்டுவிடக் கூடாது.

இந்த ஊழல் குறித்தும், ஏற்கெனவே ஆதாரங்கள் வழங்கப்பட்ட இரு ஊழல்கள் குறித்தும் தமிழக காவல்துறை உடனடியாக வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்த வேண்டும். இந்த ஊழல்களில் தொடர்புடைய அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்தி கடுமையான தண்டனை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும்." என்று அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.

## "தமிழகம், மே.வங்கத்தில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு அமோக வெற்றி" அமித் ஷா கணிப்பு



அகமதாபாத். டிச.9-

அடுத்த ஆண்டு நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் மேற்கு வங்கம் மற்றும் தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெறும் என மத்திய அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலத்தில் பல்வேறு அரசு திட்டங்களை ஞாயிற்றுக்கிழமை அவர் தொடங்கி வைத்தார். அப்போது அவர் கூறியதாவது: 2014 மக்களவைத் தேர்தல் தொடங்கி தற்போது வரை (2025) பாஜக தொடர் வெற்றிகளைப் பெற்று வருகிறது. 2024 மக்களவை தேர்தல் வெற்றியின் மூலம் தொடர்ந்து மூன்றாவது முறையாக பிரதமர் ஆனார் நரேந்திர மோடி. இது பல ஆண்டுகளுக்குப் பின்னர் படைக்கப்பட்ட சாதனையாகும்.


பிரதமர் மோடியின் தலைமையிலான ஆட்சியில், இந்திய தேசம் அனைத்து துறைகளிலும் வளர்ச்சி கண்டு, உலக அளவில் சிறந்த நாடாக திகழும் என்ற நம்பிக்கையை மக்கள் கொண்டுள்ளனர்.

எதிர்க்கட்சிகளுக்கு தலைவர்களோ அல்லது கொள்கைகளோ இல்லை. தேசத்தின் எந்தப் பகுதியிலும் அவர்கள் மக்களால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. இந்த மேடையில் இருந்து மம்தா பானர்ஜி மற்றும் ஸ்டாலினுக்கு ஒன்றை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பிஹாரை தொடர்ந்து மேற்கு வங்கத்திலும், தமிழகத்திலும் தேசிய ஜனநாயக கூட்டணி அமோக வெற்றி பெற்று திருப்புமுனையை ஏற்படுத்தும். அதற்கு தயாராக இருங்கள்.

எதிர்வரும் தேர்தல் முடிவுகள் வரட்டும். மேற்கு வங்கத்தில் திரிணமூல் காங்கிரஸும், தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகமும் துடைத்தெறியப்படும். இவ்வாறு அமித் ஷா கூறினார்.

தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியில் அதிமுக மற்றும் பாஜக அங்கம் இடம்பெற்றுள்ளன. விரைவில் அமித் ஷா தமிழகம் வர உள்ளதாகவும் தகவல் நிலவுகிறது. இந்நிலையில், ஸ்டாலினுக்கு அமித் ஷா விடுத்துள்ள இந்த செய்தி அரசியல் வட்டாரத்தில் கவனம் பெறுகிறது.

## தமிழகத்தில் இரு நாட்களுக்கு மிதமான மழை



சென்னை, டிச.9-

'தமிழகம் மற்றும் புதுச்சேரியில், இன்றும், நாளையும், இடி, மின்னலுடன், மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது' என, சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

அதன் அறிக்கை: நேற்று காலை வரையிலான, 24 மணி நேரத்தில், புதுக்கோட்டை மாவட்டம் மிமிசல் பகுதியில், 4 செ.மீ., மழை பெய்துள்ளது. இதற்கு அடுத்ததாக, ராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை, திருநெல்வேலி மாவட்டம் ஊத்து, காக்காச்சி, நாலுமுக்கு ஆகிய இடங்களில், தலா, 3 செ.மீ., மழை பதிவாகியுள்ளது.

கிழக்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, தமிழகத்தில் சில இடங்கள் மற்றும் புதுச்சேரியில், இன்றும், நாளையும், இடி, மின்னலுடன், மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில், இன்று வானம் ஓரளவு மேகமூட்டமாக காணப்படும். சில இடங்களில் லேசான மழை பெய்யும்.

தமிழகத்தின் வடகடலோர பகுதிகளில், நாளை மணிக்கு, 35 முதல், 45 கி.மீ., வேகத்திலும், இடையிடையே மணிக்கு, 55 கி.மீ., வேகத்திலும், சூறாவளி காற்று வீசக்கூடும். எனவே மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.



## இண்டிகோ விமானங்களின் தாமதம் தொடரும்; டில்லி விமான நிலையம் எச்சரிக்கை

டில்லி, டிச.9-

இண்டிகோ விமானங்கள் தாமதங்கள் இன்றும் தொடரும் என பயணிகளுக்கு டில்லி விமான நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இண்டிகோ விமானங்கள் சேவை இன்னும் இயல்பு நிலைக்குத் திரும்பவில்லை. நாடு முழுவதும் பல விமான நிலையங்களில் இன்றும் (டிசம்பர் 8) தாமதங்கள் மற்றும் ரத்து செய்தல்கள் தொடர்ந்தன. நாடு இதுவரை சந்திக்காத அளவிலான விமானப் பயண நெருக்கடியின் 7வது நாளாகும்.

இது தொடர்பாக, இன்று (டிசம்பர் 8) டில்லி விமான நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

இண்டிகோ விமானங்கள் தொடர்ந்து தாமதங்களை சந்திக்கக்கூடும். எந்தவொரு சிரமத்தையும் தவிர்க்க விமான நிலையத்திற்குச் செல்வதற்கு முன் பயணிகள் தங்கள் விமான நிறுவனத்துடன் சமீபத்திய விமான சேவை கால அட்டவணையை https://www.newdelhiairport.in/ என்ற இணையதளத்தில் சரிபார்க்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இடையூறுகளைக் குறைப்பதற்கும், சுமூகமான பயண அனுபவத்தை உறுதி செய்வதற்கும், டில்லி விமானநிலைய அதிகாரிகள் பணியாற்றி வருகின்றன. விமான நிலையத்திற்குச் சென்று பயணிகள் திரும்புவதற்கு மெட்ரோ, பஸ்கள் உள்ளிட்ட வசதிகள் கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இண்டிகோ விமான நிறுவனம் இதுவரை ரூ.610 கோடி மதிப்பிலான டிக்கெட்டுகளைத் திரும்பப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# அண்ணா நகர் ஜிஎஸ்டி ஆணையரகத்தில் தீ விபத்து: இரண்டரை மணி நேரம் போராடி தீ அணைப்பு



சென்னை. டிச.9-

அண்ணா நகர் ஜிஎஸ்டி ஆணையரகத்தில் நேற்று திடீர் தீ விபத்து ஏற்பட்டது. இரண்டரை மணி நேரம் போராடி தீ அணைக்கப்பட்டது. சென்னை அண்ணாநகர் மேற்கு, 2வது அவென்யூவில் ஜிஎஸ்டி ஆணையரகம் செயல்பட்டு வருகிறது.

நேற்று காலை 8.30 மணியளவில், இந்த அலுவலகத்தின் தரைத்தளத்தில் உள்ள கேன்டீனில் இருந்து திடீரென புகை கிளம்பியது. அது சிறிது நேரத்தில் தீயாக மாறி மளமளவென பெண் அதிகாரிகள் ஓய்வறை மற்றும் இதர அறைகளுக்கு பரவியது.

இதனால் ஜிஎஸ்டி அலுவலக வளாகத்தில் இருந்தவர்கள் உடனடியாக வெளியேறினர். இதுகுறித்து தீயணைப்பு கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து தீயணைப்புத் துறை இணை இயக்குநர் சத்யநாராயணா தலைமையில் 10 தீயணைப்பு வாகனங்களில் வந்த 60 தீயணைப்பு வீரர்கள் 2.30 மணி நேரம் போராடி, தண்ணீரை பீய்ச்சியடித்து தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்த விபத்தில் முக்கிய ஆவணங்கள், கேன்டினில் இருந்த பாத்திரங்கள், மின்னணு உபகரணங்கள் உட்பட பல்வேறு வகையான பொருட்கள் சேதமடைந்தன.

மின்கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டதா அல்லது சதிச் செயலா என திருமங்கலம் போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். முன்னதாக தடயவியல் துறை அதிகாரிகளும் தீ விபத்து நடந்த இடத்தைப் பார்வையிட்டு தடயங்களை சேகரித்தனர்.

# மிகப்பெரிய சிக்கலுக்கு வழிவகுக்கும்; நெட் பிளிக்ஸ் நிறுவனத்திற்கு அமெரிக்க அதிபர் டிரம்ப் எச்சரிக்கை




வாஷிங்டன், டிச.9-

உலகின் மிகப்பெரிய திரைப்பட தயாரிப்பு நிறுவனமான வார்னர் பிரதர்ஸை வாங்கும் நெட் பிளிக்ஸின் முடிவு, மிகப்பெரிய சிக்கலை உண்டாக்கும் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

உலகளவில் படங்களை தயாரிப்பதிலும், விநியோகத்திலும் நூற்றாண்டுக்கு மேலாக கோலோச்சி வந்த வார்னர் பிரதர்ஸ் நிறுவனத்தை, ரூ.7.44 லட்சம் கோடிக்கு நெட்பிளிக்ஸ் ஓடிடி நிறுவனம் வாங்கியுள்ளது.

இதன்மூலம், வார்னர் பிரதர்ஸ் நிறுவனத்தின் ஸ்டுடியோக்கள், தயாரித்த திரைப்படங்கள், வெப் சீரிஸ், டிசி காமிக்ஸ் படங்கள் மற்றும் ஹெச்பிஓ ஓடிடி தளம் ஆகியவற்றையும் நெட்பிளிக்ஸ் கையகப்படுத்தியுள்ளது. அடுத்த 12 முதல் 18 மாதங்களுக்கு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட தொகையை வார்னர் பிரதர்ஸ் நிறுவனத்திற்கு, நெட்பிளிக்ஸ் வழங்க உள்ளது.

இந்த நிலையில், வார்னர் பிரதர்ஸ் நிறுவனத்தை வாங்கும் நெட் பிளிக்ஸ் நிறுவனத்திற்கு அமெரிக்க அதிபர் டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார். அவர் கூறியதாவது; நெட் பிளிக்ஸ் நிறுவனம் ஏற்கனவே மிகப்பெரிய சந்தை மதிப்பைக் கொண்டுள்ளது. தற்போது, வார்னர் பிரதர்ஸ் நிறுவனத்தை வாங்கும் முயற்சி மிகப்பெரிய சிக்கலை ஏற்படுத்தக் கூடும், எனக் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் வெள்ளை மாளிகைக்கு சென்ற நெட் பிளிக்ஸ் நிறுவனத்தின் இணை தலைமை நிர்வாக அதிகாரி டெட் சராண்டோஸைப் பாராட்டிய அதிபர் டிரம்ப், 'திரைப்பட வரலாற்றில் மிகச் சிறந்த பணிகளில் ஒன்றைச் செய்துள்ளார்,' என்று கூறியிருந்தார்.

# முக்கிய சாலைக்கு அதிபர் டிரம்ப் பெயர் சூட்டுகிறது தெலுங்கானா அரசு



ஹைதராபாத். டிச.9-

தெலங்கானாவில் அமெரிக்க தூதரக அலுவலகம் அமைந்துள்ள சாலைக்கு அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் பெயர் வைக்க அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது.

தெலங்கானாவில் அமெரிக்க துணை தூதரகம் அமைந்துள்ள ஹைதராபாத்தின் மிக முக்கிய சாலைக்கு 'டொனால்ட் டிரம்ப் அவென்யூ' என்று பெயர் வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் மற்றும் அமெரிக்க தூதரகத்திற்கு எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க தெலங்கானா அரசு முடிவு செய்துள்ளது.

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் டில்லியில் நடந்த இந்தியா அமெரிக்கா நாடுகளின் மாநாட்டில் பேசிய தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி, ஹைதராபாத்தின் முக்கிய சாலைகளுக்கு முன்னணி உலக நிறுவனங்களின் பெயர்களை சூட்ட இருப்பதாக அறிவித்தார். அதைத் தொடர்ந்து, முன்னணி நிறுவனங்கள் மற்றும் முக்கிய தலைவர்களின் பெயர்கள் சூட்டப்பட்டு வருகின்றன.

அதன்படி, ஹைதராபாத்தில் ரவிர்யாலாவில் நேரு வெளிவட்டச் சாலையை இணைக்கும் புதிய க்ரீன்பீல்டு சாலைக்கு, மறைந்த தொழிலதிபர் ரத்தன் டாடாவின் பெயர் சூட்டப்பட இருக்கிறது. முன்னதாக ரவிர்யாலா மாற்று சாலைக்கு 'டாடா இண்டர்சேஞ்ச்' என்று பெயர் மாற்றப்பட்டது.

கூகுள் நிறுவனத்தை கவுரவிக்கும் விதமாக, ஹைதராபாத்தின் முக்கிய சாலைக்கு 'கூகுள் தெரு' என்று பெயரிடப்பட இருக்கிறது. அதேபோல, மைக்ரோசாப்ட் மற்றும் விப்ரோ நிறுவனங்களின் பெயர்களையும் சாலைகளுக்கு வைப்பது தொடர்பாக தெலங்கானா அரசு ஆலோசனை நடத்தி வருகிறது.

# பட்டமளிப்பு விழாவில் கவர்னரை அவமதித்தது ஏற்புடையதல்ல: ஐகோர்ட்




மதுரை. டிச.9-

''பல்கலை பட்டமளிப்பு விழாவில், கவர்னரை அவமதிக்கும் வகையில் மாணவி நடந்து கொண்டது ஏற்புடையதல்ல,'' என்று ஐகோர்ட் மதுரை கிளை தெரிவித்துள்ளது.

திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலை பட்டமளிப்பு விழா, இந்தாண்டு ஆக.,13ம் தேதி நடந்தது. கவர்னர் ஆர்.என். ரவி, பட்டச்சான்றுகளை மாணவ, மாணவியருக்கு வழங்கினார்.

அப்போது முனைவர் பட்டம் பெற வந்த மாணவி ஜீன் ஜோசப், கவர்னர் ரவியிடம் பட்டம் பெறாமல், அருகில் இருந்த துணைவேந்தர் சந்திரசேகரிடம் பட்டச்சான்றை காட்டி விட்டு மேடையில் இருந்து இறங்கினார். அனைவரது முன்னிலையில் சபை நாகரிகம் இன்றி அவர் நடந்து கொண்ட இந்த சம்பவம், பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

'கவர்னர் ரவி, தமிழகத்துக்கும், தமிழர்களுக்கும் எதிராக செயல்பட்டு வருகிறார். அதனால் அவரிடம் பட்டம் பெற விரும்பவில்லை' என்றும் ஜீன் ஜோசப் தெரிவித்தார். விசாரணையில், அவர் நாகர்கோவில் நகர திமுக துணை செயலாளர் ராஜன் என்பவரது மனைவி என்பது தெரியவந்தது.

இந்த சர்ச்சையை தொடர்ந்து, பல்கலை வேந்தரான கவர்னரிடம் பட்டம் பெற மறுத்து அவமதித்த மாணவி ஜீன்ஜோசப்பின் முனைவர் பட்டத்தை ரத்து செய்யக்கோரி ஐகோர்ட் மதுரை கிளையில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

விசாரித்த ஐகோர்ட் மதுரை கிளை, 'மாணவி இவ்வாறு நடந்தது ஏற்புடையதல்ல. அவர் மீது நடவடிக்கை எடுக்க பல்கலை சட்டத்தில் வழிவகை உள்ளதா' என்று தெரிவிக்க உத்தரவிட்டு விசாரணையை ஒத்தி வைத்தது.

# புதுச்சேரி தவெக பொதுக்கூட்டத்தில் தமிழகத்தை சேர்ந்தவர்களுக்கு அனுமதியில்லை: ஆனந்த்



புதுச்சேரி. டிச.9-

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் தமிழக வெற்றிக் கழகம் நாளை (டிச.9) நடத்தும் பொதுக்கூட்டத்தில் அக்கட்சியின் தலைவர் விஜய், பங்கேற்று பேசுகிறார். இந்தக் கூட்டம் புதுச்சேரி உப்பளம் துறைமுக வளாகத்தில் நடைபெறுகிறது.

இந்நிலையில், தவெக தொண்டர்களுக்கு வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டுள்ளார் அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஆனந்த். இவர் புதுச்சேரியை சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அவரது அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

நாளை (செவ்வாய்க்கிழமை) புதுச்சேரி, உப்பளத்தில் காலை 10.30 மணிக்கு தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய்யின் 'புதுச்சேரி மாநில மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி' நடைபெற உள்ளது. காவல் துறை வழிகாட்டு நெறிமுறைகளின்படி, இந்த நிகழ்ச்சிக்குப் புதுச்சேரியை சேர்ந்த, க்யூஆர் குறியீட்டுடன் கூடிய நுழைவுச் சீட்டு வைத்திருக்கும் 5 ஆயிரம் பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

புதுச்சேரியை ஒட்டியுள்ள தமிழக மாவட்டங்கள் உள்பட, தமிழகத்தைச் சேர்ந்த யாருக்கும் கண்டிப்பாக அனுமதி கிடையாது. கட்சியினரும், பொதுமக்களும் இதற்கு முழு ஒத்துழைப்பு தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தன்னை நேசிக்கும் மக்களின் பாதுகாப்பில் எள்ளளவும் சமரசம் செய்துகொள்ளாதவர் தவெக தலைவர் விஜய். எனவே அவரது புதுச்சேரி மாநில மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியின்போது கழகத்தினரும், பொதுமக்களும் சில வழிகாட்டு நெறிமுறைகளைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

கர்ப்பிணிப் பெண்கள், கைக்குழந்தையுடன் இருக்கும் சகோதரிகள், முதியவர்கள், உடல்நலம் குன்றியோர், பள்ளிச் சிறுவர், சிறுமியர், மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு இந்த மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்கு அனுமதி இல்லை. இவர்கள் வீட்டில் இருந்தபடியே நேரலையில் காணுமாறு பேரன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தலைவர் விஜய்யின் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிக்கு வரும் போதும், நிகழ்ச்சியை முடித்துவிட்டுச் செல்லும் போதும் அவரது வாகனத்தை இருசக்கர வாகனங்களிலோ அல்லது வேறு வாகனங்களிலோ பின்தொடர்வது, போக்குவரத்துக்கு இடையூறாகச் செயல்படுவது போன்ற செயல்களில் ஈடுபடுவதை அறவே தவிர்க்க வேண்டும்.

காவல் துறையின் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி, விதிகளுக்கு உட்பட்டு நடந்துகொள்ள வேண்டும். போக்குவரத்து விதிகளை முழுவதுமாகப் பின்பற்ற வேண்டும். அனைத்து வகையான வரவேற்பு நடவடிக்கைகளுக்கும் அனுமதி இல்லை. எனவே கழகத்தினர் அவற்றைத் தவிர்க்க வேண்டும்.

மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெறும் பகுதிகளில் உள்ள அரசு மற்றும் தனியார் கட்டிடங்கள், மதில் சுவர்கள், மரங்கள், வாகனங்கள் (பஸ், வேன், ஆட்டோ மற்றும் இருசக்கர வாகனங்கள்), கொடிக் கம்பங்கள் ஆகியவற்றின் மீது ஏறக் கூடாது. மின்விளக்குக் கம்பங்கள், மின் கம்பங்கள், மின்மாற்றிகள் ஆகியவற்றின் அருகில் செல்லக் கூடாது. சிலைகள் மற்றும் அவற்றைச் சுற்றி ஏதும் பாதுகாப்பு கிரில் கம்பிகள், தடுப்புகள் அமைக்கப்பட்டிருந்தால் அவற்றின் அருகில் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியின் போது, அப்பகுதிகளில் ஆம்புலன்ஸ் வாகனங்களுக்கும், பொது மக்களுக்கும், வாகன ஓட்டிகளுக்கும். பள்ளி மாணாக்கர்களுக்கும், பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் மற்றும் நோயாளிகளுக்கும் எவ்விதப் போக்குவரத்து இடையூறும் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும்.

மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி முடிந்தவுடன் அனைவரும் அமைதியான முறையில், யாருக்கும் எவ்வித இடையூறும் ஏற்படுத்தாமல் கலைந்து செல்ல வேண்டும். இவ்வாறு ஆனந்த் அந்த அறிக்கை வாயிலாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# "நீங்கள் அங்காளி, பங்காளி என்றால் நாங்கள் மாமன், மச்சான்" முதல்வருக்கு நயினார் விளக்கம்



சென்னை, டிச.9-

இஸ்லாமியர்களுடன் அங்காளிகள், பங்காளிகளாக பழகுகிறோம் என முதல்வர் ஸ்டாலின் கூறுகிறார். நாங்கள் இஸ்லாமியர்களுடன் மாமன், மச்சானாக பழகி வருகிறோம் என்று தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

அம்பேத்கர் நினைவு நாளையொட்டி தமிழக பாஜக சார்பில் சமபந்தி போஜனம் விழா நேற்று நடைபெற்றது. இதில் பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், தி.நகர் சட்டப்பேரவை தொகுதி பாஜக பொறுப்பாளர் வினோஜ் பி.செல்வம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அப்போது செய்தியாளர்களிடம் நயினார் நாகேந்திரன் கூறியதாவது: நான் முதல்வரை பல கோணங்களில் பார்த்திருக்கிறேன். என்னை பொருத்தவரை அவர் நல்ல மனிதர். ஆனால், அவரது ஆட்சியை என்னால் அப்படி சொல்ல முடியவில்லை. இஸ்லாமியர்களுடன் அங்காளிகள், பங்காளி களாக பழகுகிறோம் என முதல்வர் ஸ்டாலின் சொல்கிறார். நாங்கள் இஸ்லாமியர்களுடன் மாமன் மச்சானாக பழகி வருகிறோம்.

திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்றுவதால், இஸ்லாமியர்களுக்கு எந்தவித வருத்தமோ, பிரச்சினையோ இல்லை. 2026 தேர்தலை மனதில் வைத்து தான் இஸ்லாமியர்களுடனான உறவை அங்காளி, பங்காளி என முதல்வர் ஸ்டாலின் உறவுமுறை கொண்டாடுகிறார். இது சண்டை சச்சரவுக்கும், வாக்கு வங்கிக்காகவும் பயன்டுத்தக்கூடிய வார்த்தையாக தான் இருக்கிறது.

தமிழகம் அயோத்தி போல மாறும் என கூறியது, பகல் கனவாக போய்விடும் என கனிமொழி, சேகர்பாபு ஆகியோர் தெரிவித்துள்ளனர். உண்மையில், அவர்களுக்கு தான் பகல் கனவாக அமைய போகிறது. திமுகவினர் கொடுத்திருந்த 525 வாக்குறுதிகளில், வெறும் 30 வாக்குறுதிகளை மட்டும் தான் நிறைவேற்றியிருப்பார்கள். எனவே, பிஹாரை போல, தமிழகத்தில் 200 க்கும் மேற்பட்ட தொகுதிகளில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெறும்.

திமுக 90 தொகுதிகளும், தவெக 70 தொகுதிகளிலும் வெற்றி பெறும் எனவும், அதிமுக கூட்டணி 35 தொகுதிகளில் மட்டும் தான் வெற்றி பெறும் என மத்திய உளவுத்துறை சர்வே வெளியிட்டதாக பத்திரிக்கைகளில் வந்த செய்திகள் குறித்து கேட்கிறீர்கள். இது ஒரு கருத்து கணிப்பா? யாரோ சர்வைவல்(பிழைப்பதற்காக) ஆவதற்காக போடப்பட்ட ஒரு சர்வே தான் அது. மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, உலகமே போற்றும் தலைவரான மோடிக்கு கிடைக்காத சர்வே ரிப்போர்ட்டா இவர்களுக்கு கிடைத்து விட்டது.

திருவொற்றியூர் கோயிலில் விஜபிக்கள் மட்டும் போகிறார்கள். நாங்கள் நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்கிறோம் என மக்கள் கேள்வி கேட்ட போது, அவர்களிடம் சேகர்பாபு பொறுமையாக பதில் அளித்திருக்க வேண்டும். பக்தர்களை, பெண்களை ஒருமையில் பேசியிருக்கிறார். அமித் ஷா, ஓபிஎஸ் சந்திப்பு குறித்து நான் கருத்து கூற முடியாது. இருந்தாலும், ஓபிஎஸ் ன் எண்ணம் எதுவாக இருந்தாலும், அவரது நல்ல எண்ணம் ஈடேற வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# நில அபகரிப்பு வழக்கு; அழகிரியின் மேல்முறையீட்டு மனு தள்ளுபடி



புதுடில்லி. டிச.9-

நில அபகரிப்பு வழக்கில் இருந்து தன்னை விடுவிக்கக் கோரி முன்னாள் மத்திய அமைச்சர் அழகிரி தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

மதுரை மாவட்டம் சிவரக்கோட்டையில் கோவிலுக்குச் சொந்தமான 44 சென்ட் இடத்தை அபகரித்ததாக முன்னாள் மத்திய அமைச்சர் அழகிரி (கருணாநிதி மகன்) உள்பட 7 பேர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்திருந்தனர். இது தொடர்பான வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், இந்த வழக்கை எதிர்கொண்டு தான் ஆக வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தது.

இந்த உத்தரவை எதிர்த்தும், இந்த வழக்கில் இருந்து தன்னை விடுவிக்கக்கோரியும் முக அழகிரி தரப்பில் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த வழக்கு இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, விசாரணை நீதிமன்றத்தில் உள்ள வழக்கை ஏன் எதிர்கொள்ளக் கூடாது என்று அழகிரி தரப்புக்கு நீதிபதி கேள்வி எழுப்பினார்.

மேலும், இந்த விவகாரத்தில் சென்னை உயர்நீதிமன்றம் சரியான கருத்தை தான் பிறப்பித்துள்ளது. எனவே, வழக்கை நீங்கள் அங்கே சந்திக்குமாறு கூறி, மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

# நெல்லை மாவட்டம் காவல்கிணறு மகேந்திரகிரி இஸ்ரோ மையத்துக்கு வெடிகுண்டு மிரட்டல்

நெல்லை, டிச.9-

நெல்லை மாவட்டம் காவல்கிணறு மகேந்திரகிரி இஸ்ரோ மையத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் விடப்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலம் வெடிகுண்டு மிரட்டல் வந்ததை அடுத்து மத்திய தொழிலக பாதுகாப்பு படை, போலீசார் சோதனை நடத்தி வருகின்றனர்.

# ஹிந்து முன்னணி போராட்டம்; ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கைது



சென்னை. டிச.9-

திருப்பரங்குன்றம் விவகாரத்தில், தி.மு.க., அரசை கண்டித்து, தமிழகம் முழுதும் ஹிந்து முன்னணியினர் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

சென்னையில் கோயம்பேடு 100 அடி சாலையில், ஹிந்து முன்னணி செய்தித் தொடர்பாளர் இளங்கோவன் தலைமையில், சினிமா சண்டை பயிற்சியாளர் கனல் கண்ணன், பா.ஜ., கவுன்சிலர் உமா ஆனந்தன் உட்பட, 200க்கும் மேற்பட்டோர் திரண்டனர்.

ஆனால், போராட்டத்திற்கு அனுமதி இல்லை என கூறி, அவர்களை போலீசார் கைது செய்தனர். அப்போது சிலர், கோயம்பேடு பேருந்து நிலையத்தில் இருந்து வந்த பேருந்தை வழி மறித்தனர். அவர்களை போலீசார் குண்டுக்கட்டாக தூக்கி சென்றபோது, சபரிமலைக்கு மாலை அணிந்திருந்த ஒருவரது மாலை அறுந்ததால், வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

திருப்பூர்

திருப்பூரில் 15 இடங்களில் ஆர்ப்பாட்டம் நடத்துவதாக ஹிந்து முன்னணி அறிவித்தது. போலீஸ் தடையை மீறி ஹிந்து முன்னணியினர் நேற்று மாலை குவிந்தனர். தாராபுரம் சாலை, புதுபீர் பிரிவு அருகே, மாநில தலைவர் காடேஸ்வரா சுப்ரமணியம் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது. அவர்களை போலீசார் கைது செய்தனர்.

இதுபோல, புஷ்பா சந்திப்பு பகுதியில் மாநில செயலர் செந்தில்குமார் தலைமையில் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றோர் கைது செய்யப்பட்டனர். ஹிந்து முன்னணி சார்பில், கோட்டை மாரியம்மன் கோவில் அருகே, கைகளில் கார்த்திகை தீபம் ஏந்தி ஆர்ப்பாட்டம் நடத்தினர். திருப்பூர் முழுதும் 1,000த்துக்கும் மேற்பட்டோர் கைதாகினர்.

மதுரை

மதுரை பழங்காநத்தத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தில், ஹிந்து முன்னணி மாநில செயலர் சேவுகன் தலைமையில் ஏராளமானோர் பங்கேற்றனர். பெண்கள் உட்பட 250க்கும் மேற்பட்டோரை போலீசார் கைது செய்தனர்.

மதுரையை அடுத்த எழுமலை பகுதியில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் 30க்கும் மேற்பட்டோர் கைதாகினர்.

கோவை

தமிழக அரசை கண்டித்தும், நீதிபதி சுவாமிநாதனை விமர்சிக்கும் நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும், கோவையில் ஹிந்து முன்னணி மற்றும் ஹிந்து மக்கள் கட்சியினர் நேற்று மாலை கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

செல்வபுரம் சாலை, சிவாலயா சந்திப்பு பகுதியில் சாலை மறியலில் ஈடுபட்டவர்களை போலீசார் கைது செய்தனர். செட்டி வீதி சந்திப்பில் ஹிந்து மக்கள் கட்சியினர், சாலையில் அமர்ந்து, 'தி.மு.க.,வை தடை செய்ய வேண்டும்' என கோஷமிட்டனர்.

இதையடுத்து, ஹிந்து மக்கள் கட்சி தலைவர் அர்ஜுன் சம்பத் உட்பட, 40க்கும் மேற்பட்டோரை குண்டுக்கட்டாக போலீசார் கைது செய்தனர்.


அர்ஜுன் சம்பத் கூறுகையில், ''நீதிமன்ற உத்தரவை அமல்படுத்தாத தி.மு.க., அரசை 'டிஸ்மிஸ்' செய்யக் கோரியும், திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்றக்கோரியும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்,'' என்றார்.



# நொய்யல் ஆற்றில் நீர் செறிவூட்டல் திட்டத்தினை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைத்தார்

திருப்பூர், டிச.09-

திருப்பூர் மாவட்டம் காங்கேயம் ஊராட்சி ஒன்றியம் கத்தாங்கண்ணி நொய்யல் ஆற்றில், திருப்பூர் மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியின் கீழ் நொய்யல் ஆற்று படுகையில் உள்ள கிணற்றிலிருந்து, நீரேற்று முறையில், காங்கேயம் வட்டத்திற்குட்பட்ட பால சமுத்திரம் புதூர், கத்தாங்கண்ணி மற்றும் கணபதிபாளையம் ஊராட்சிகளில் உள்ள 20 எண்ணிக்கையிலான குளம், குட்டைகள் மற்றும் தடுப்பணைகளுக்கு, நீர் செறிவூட்டல் திட்டத்தினை அமைச்சர் மு. பெ. சுவாமிநாதன் துவங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் மனீஷ் நாரண வரே, தலைமை பொறியாளர் முருகேசன், கண்காணிப்பு பொறியாளர் கோபி, செயற்பொறியாளர் திருமூர்த்தி, திருப்பூர் மாநகராட்சி 4 ஆம் மண்டல தலைவர் இல. பத்மநாபன் ஆகியோர் உள்ளனர்.




# திருப்பூர் நெடுஞ்சாலை வடக்கு உட்கோட்டத்திற்கு உட்பட்ட சுற்றுச் சாலைகளில் பராமரிப்பு பணிகள் தீவிரம்

திருப்பூர், டிச.08-

திருப்பூர் நெடுஞ்சாலை வடக்கு உட்கோட்டத்திற்கு உட்பட்ட, மாநில நெடுஞ் சாலைகளான திருப்பூர் சோமனூர் சாலை கோழிப்பண்ணை பேருந்து நிறுத்தம் அருகில், திருப்பூர் சுற்றுச்சாலை பூண்டி கோவில் மற்றும் அணைப்பாளையம் பகுதிகளில், அனுப்பர்பாளையம் ஆத்துப்பாளையம் போன்ற பகுதிகளிலும் போக்குவரத்து சீராக செல்லும் வகையில் தார்நொடிகள் போடப்பட்டு, சாலை பராமரிப்பு பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது. போக்குவரத்திற்கும் பொது மக்களுக்கும் இடையூறு ஏதுமின்றி வாகனங்கள் சென்றுவர சாலை ஏதுவாக இருக்கும் வகையில் சிறப்பாக பணி மேற்கொள்ளப்பட்டது. சிறப்பாக மேற்கொள் ளப்பட்டது. இதனால் போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் இடையூறு ஏதும் இன்றி வாகனங்கள் சென்றுவர சாலை ஏதுவாக இருக்கும் என உதவி கோட்ட பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர்கள் தெரிவித்தனர்.



■ திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் திண்டுக்கல் மேட்டுப்பட்டி பகுதியைச் சேர்ந்த பலர் இலவச வீட்டு மனை பட்டா வழங்க கோரி மாவட்ட ஆட்சியர் அவர்களை சந்தித்து கோரிக்கை மனு



■ புரட்சியாளர் அம்பேத்கர் நினைவு நாளை முன்னிட்டு மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள பெரியஊர்சேரி கிராமத்தில் அமைந்துள்ள அவரது சிலைக்கு ஆதித்தமிழர் பேரவை சார்பாக மாநில பொறுப்பாளர் கபீர்நகர் கார்த்திக், மாநில பொறுப்பாளர் முத்துராமன், தோழர் மாநில மகளிரணி பொறுப்பாளர் வாசுகி, பொறுப்பாளர் ஆதவன் தோழர் ஆதித்தமிழர் பேரவை மதுரை வடக்கு கிழக்கு ஒன்றிய ஒத்தக்கடை மாவட்ட பொறுப்பாளர்கள் பகலவன். இளமாறன் தோழர்.அலங்கை ஒன்றிய பொறுப்பாளர் மகளிரணி தோழர்கள் பஞ்சு. மல்லிகா செல்வி. ஒன்றிய பொறுப்பாளர் முத்து சிவா. ரவி காளிமுத்து அருணாச்சலம். சங்கிலி. மாவட்ட பொறுப்பாளர் தமிழ்குமரன் உள்ளிட்டோர் கலந்து கலந்துகொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.




■ திண்டுக்கல் ஒருங்கிணைந்த நீதிமன்றம் முன்பு திண்டுக்கல் வழக்கறிஞர் சங்கம் சார்பாக திண்டுக்கல் வழக்கறிஞர் சங்க தலைவர் குமரேசன் தலைமையில் செயலாளர் செல்வராஜ் முன்னிலையில் வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களில் E- Filing செய்வதற்கான அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தாமல் 1ம் தேதி முதல் E-Filing முறையை நடைமுறைபடுத்தியதை நிறுத்திவைக்ககோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# "லஞ்சத்தை இயல்பாக்கிய திமுக" ரூ.1020 கோடி 'கட்சி நிதி' விவகாரத்தில் தவெக விமர்சனம்



சென்னை, டிச.09-

1020 கோடி ரூபாய் அமைச்சர் நேருவின் உறவினர்கள் மூலம் 'கட்சி நிதி' (PARTY FUND) என்கிற வகையில் லஞ் சமாக பெறப்பட்டிருப்பதாக அமலாக்கத் துறை 252 பக்க ஆவணத்தை முழுமையான வலிமையான ஆதாரங்களுடன் அனுப்பி இருக்கிறது என தவெக கொள்கை பரப்புப் பொதுச் செயலாளர் அருண்ராஜ் குற்றம்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "36 நாட்கள் இடைவெளியில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேருவின் ஊழல் மணி மகுடத்தில் இன்னொரு மயிலிறகை செருகி இருக்கிறது அமலாக்கத் துறை. நகராட்சி நிர்வாகத் துறையில் நடைபெற்ற பணி நியமனங்களுக்கு ரூ.25 லட்சம் முதல் ரூ.50 லட்சம் வரை லஞ்சம் வாங்கப்பட்டிருக்கிறது என ஆதாரங்களை அனுப்பி அதன் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு டிஜிபிக்கு அமலாக்கத் துறை கடந்த அக்டோபர் 27ல் கடிதம் எழுதியது.

அதன் மீது இன்னமும் அமர்ந்து கொண்டிருக்கிறார் பொறுப்பு டிஜிபி. இப்போது டிசம்பர் 3ஆம் தேதி அமலாக்கத் துறை மீண்டும் ஒரு கடிதத்தை தமிழ்நாடு தலைமைச் செயலாளர், டிஜிபி, லஞ்ச ஒழிப்புத்துறை இயக்குனர் ஆகியோருக்கு அனுப்பி இருக்கிறது.

இந்தக் கடிதத்தில், நகராட்சி நிர்வாக துறைக்கு உட்பட்ட பொது கழிப்பறைகள், துப்புரவுத் தொழிலாளர்களை அவுட்சோர்சிங் செய்தல், நபார்டு திட்டங்கள், துப்புரவு பணியாளர் குடியிருப்புகள், கிராம சாலைகள், நீர் / ஏரி வேலைகள் போன்ற ஒவ்வொரு ஒப்பந்தத்திலிருந்தும் லஞ்சம் வசூலிக்கப்பட்டதாக ED குற்றம் சாட்டியுள்ளது.

இந்த வகையில் மட்டும், சுமார் 1020 கோடி ரூபாய் அமைச்சர் நேருவின் உறவினர்கள் மூலம் "PARTY FUND" என்கிற வகையில் லஞ் சமாக பெறப்பட்டிருப்பதாக 252 பக்க ஆவணத்தை முழுமையான வலிமையான ஆதாரங்களுடன் அனுப்பி இருக்கிறது அமலாக்கத்துறை.

நகராட்சி நிர்வாக துறை மட்டுமல்ல, முதல்வர் தலைமையிலான அரசின் ஒவ்வொரு துறையின் ஒவ்வொரு ஒப்பந்தத்திலும் இதுதான் நடக்கிறது.

வளர்ச்சி, வளர்ச்சி என வறட்டு வசனம் பேசி வரும் முதல்வர் ஸ்டாலின் அரசு செய்த சாதனை ஒன்றே ஒன்றுதான். அது, ஊழலை normalising அதாவது இயல்பாக்கியதுதான். ஊழலில் ஊறித் திளைக்கும் இந்த ஆட்சியை அகற்றி, தூய்மையான நிர்வாகத்தை தருவதற்கு தமிழ்நாட்டு மக்களின் நம்பிக்கை வெளிச்சமாக இருப்பது தமிழக வெற்றிக் கழகமும் நமது தலைவரும் தான்.

2026 சட்டமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டுக்கு, புதிய வெளிச்சம் கிடைப்பது உறுதி" என்று தெரிவித்துள்ளார்.




■ திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று(07.12.2025) படைவீரர் கொடிநாள்2025 நிதி வசூலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.செ.சரவணன், இ.ஆ.ப., அவர்கள் நிதி வழங்கி தொடங்கி வைத்து உரையாற்றினார். அருகில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) செல்வி.ர.கீர்த்தனா மணி, முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் (கூ.பெ) திருமதி ச.சுகுணா உட்பட பலர் உள்ளனர்.



# சின்னாளபட்டி சிறுமலை அடிவாரப் பகுதியில் தொடர் மழை அழுகிய நிலையில் திராட்சை பழங்கள் விவசாயிகள் கவலை

## ஒரு கிலோ திராட்சை ரூ.20

சின்னாளபட்டி, டிச.08-

சின்னாளபட்டி அருகே சிறுமலை அடிவாரப் பகுதியில் பயிரிடப்பட்டிருந்த திராட்சை கொடிகள் தொடர் மழை, பனியின் காரணமாகசெடியிலேயே அழுகிய நிலையில் இருப்பதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டி அருகே உள்ள சிறுமலை அடிவார கிராமங்களான வெள்ளோடு, பெருமாள்கோவில்பட்டி, அமலிநகர், ஜே.ஊத்துப்பட்டி, ஜாதிக்கவுன்டன்பட்டி, செட்டியபட்டி, மெட்டூர், கொடைரோடு, அம்மையநாயக்கனூர் காமலாபுரம் உட்பட 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் கடந்த 30 வருடங்களாக திராட்சை பயிரிடப்பட்டு வருகிறது. மண் வளம் மற்றும் சிறுமலையில் இருந்து வரும் ஊற்று நீர்களால் இப்பகுதியில் விளையும் திராட்சைகள் நன்கு ருசியுடன் இருப்பதால் தமிழகம் மற்றும் கேரளவில் இப்பகுதி திராட்சைகளுக்கு தனி மவுசு உண்டு, சபரி மலை சீசன் காலத்தில் கேரளாவிற்கு செல்லும் ஐயப்ப பக்தர்கள் எங்கள் பகுதி திராட்சையை வாங்கிச் செல்வார்கள். இப்போது பதம் இல்லாததால் வெளி மாவட்டங்களில் இருந்து திராட்சை பழங்களை கொண்டுவந்து கொடைரோடு உட்பட இப்பகுதிகளில் விற்கின்றனர் என்றார்.



■ சட்ட மாமேதை அம்பேத்கர் நினைவு நாளை முன்னிட்டு மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் பெரியஊர்சேரி கிராமத்தில் அமைந்துள்ள அவரது முழுஉருவுசிலைக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தொழிலாளர் முன்னணி கேட்டுகடை அய்யா தொல்காப்பியர் ஆட்டோ தொழிற்சங்கம் சார்பில் நிர்வாகிகள் கலந்து கொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



# திண்டுக்கல் கொடைக்கானலில் நீதிமன்ற உத்தரவை மதிக்காத திமுகவை எதிர்த்து பாஜக மற்றும் இந்து முன்னணியினர் ஆர்ப்பாட்டம்

மதுரை, டிச.09-

மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் மலைமீது அமைந்துள்ள அருள்மிகு முருகன் திருக்கோவிலில் அமைந்துள்ள தீபத்தூணில் கார்த்திகை தீபம் அன்று தீபம் ஏற்றுவதற்கு மதுரை உயர்நீதிமன்ற நீதி அரசர் ஜி ஆர் சுவாமிநாதன் உத்தரவு பிறப்பித்த நிலையில் உயர்நீதிமன்ற தீர்ப்பை மதிக்காத வகையிலும் தீபம் ஏற்ற விடாமலும் தொடர்ந்து இந்து மக்களை அவமதிக்கும் வகையிலும் நடந்து கொண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்த்து தமிழ்நாடு முழுவதும் மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டத்தை இந்து முன்னணி அறிவித்த நிலையில், திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் இந்து முன்னணி கொடைக்கானல் நகரத் தலைவர் மோகன் ஜி மற்றும் பாரதிய ஜனதா கட்சியின் திண்டுக்கல் மேற்கு மாவட்ட துணைத் தலைவர் ஜி மதன்குமார் அவர்கள் தலைமையில் (7 /12 /2025) ஞாயிறு மாலை ஐந்து முப்பது மணி அளவில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் 70 க்கும் மேற்பட்ட நிர்வாகிகள், இந்து பொதுமக்கள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அனைவரையும் கொடைக்கானல் காவல் ஆய்வாளர் வசந்தகுமார் மற்றும் துணை ஆய்வாளர் அபினேஷ் தலைமையில் அனைத்து இந்து முன்னணி மற்றும் பாரத ஜனதா கட்சி யினரை கைது செய்து தனியார் மண்டபத்தில் வைத்து, பின்னர் இரவு 10 மணிக்கு விடுவித்தனர்



# திருப்பரங்குன்றம் விவகாரம்: நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனுக்கு ஆதரவாக வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டம்

மதுரை, டிச.09-

திருப்பரங்குன்றம் விவகாரம் தொடர்பாக உயர் நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனுக்கு ஆதரவாக வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

திருப்பரங்குன்றம் மலையில் தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்ற வேண்டும் என ராமரவிக்குமார் என்பவர் தொடர்ந்த வழக்கில் உயர் நீதிமன்ற மதுரை அமர்வு நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் உத்தரவிட்டார். இந்த உத்தரவுபடி தீபத்தூணில் தீபம் ஏற்றப்படவில்லை.

தீபம் ஏற்றச் சென்ற மனுதாரர் மற்றும் பாஜகவினர், இந்து முன்னணி மற்றும் இந்து அமைப்புகளை சேர்ந்தவர்கள் போலீஸாரால் தடுக்கப்பட்டனர். நீதிபதியின் இந்த தீர்ப்பை கம்யூனிஸ்ட் கட்சிகள், விடுதலை சிறுத்தை கட்சி மற்றும் திமுக கூட்டணிக் கட்சிகள் விமர்சனம் செய்தன. இந்நிலையில் நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனுக்கு ஆதரவாக உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் பாஜக, இந்து முன்னணி மற்றும் சார்பு இயக்கங்களைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் இன்று ஆர்ப்பாட்டம் நடத்தினர். அப்போது வழக்கறிஞர்கள் நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனுக்கு ஆதரவாகவும், அவரது தீர்ப்பை விமர்சித்த மதுரை எம்பி சு.வெங்கடேசன் மற்றும் மாநில அரசுக்கு எதிராகவும், 'நீதித்துறையின் மாண்பை காப்போம், திருப்பரங் குன்றத்தில் தீபம் ஏற்றும் வரை விடமாட்டோம்' என கோஷம் எழுப்பினர்.

வழக்கறிஞர்கள் மலையேந்திரன், அருண் சுவாமிநாதன், கோகுல், மகாராஜன், தங்கதுரை, ஜெயந்தி, பொன்னுத்தாய், சுதாராணி, காந்தியம்மாள் உள்பட 70க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் பங்கேற்றனர்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000